



## மரங்கள் விழும் சம்பவம்:

# சிறப்புப் பணிக்குழுவை அமைக்க டிபிகேஎல் தரப்புக்கு உத்தரவு

கோலாலம்பூர், மே 17-

அண்மைக் காலமாக நிகழும் மரம் விழும் சம்பவங்கள் குறித்து ஆய்வு நடத்த பணிக்குழுவை அமைக்கத் தாம் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தைப் பணித்திருப்பதாக பிரதமர்துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தபா தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து முழுமையான தரவுகளைப் பெறுவதற்கு பணிக்குழு வாயிலாக ஆய்வு நடத்த கோலாலம்பூர் மாநகர் மன்றத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதில் மர பராமரிப்பாளர்கள், அரசு சாரா அமைப்புகளையும் அழைக்கின்றோம் என்று நேற்று மாலை தலைநகரில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்புக் கூட்டத்தில் அவர் குறிப்பிட்டார்.

ஆனாலும் உயர்நிலை அபாயம் உள்ள மரங்களை அடையாளம் கண்டு வெட்டுவது நெடுங்காலத் திட்டமாகும் என்றும் அவர் விவரித்தார்.

இதனிடையே இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் நான் பேசியுள்ளேன். மர பராமரிப்பாளர்கள் என்ற முறையில் மலேசிய வன ஆய்வு மையத் தரப்பினர் இந்த விவகாரத்தில் உட்படுத்தப்படுவர்.

மர வகைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டி இருப்பதால் முழுமையான ஆய்வு தேவை எனவும் டாக்டர் ஸலிஹா கூறினார்.